**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 15.11.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

## தலைப்புச் செய்திகள்

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட பழங்குடியினத் தலைவர் பிர்ஸா முண்டாவின் பிறந்த தினம் பழங்குடியினர் பெருமை தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

குஜராத்தின் சூரத்தில் கட்டுமானத்தில் உள்ள புல்லட் ரயில் நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி இன்று பார்வையிட்டார்.

உலகளவில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

நரிக்குறவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க புதுச்சேரி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறினார்.

முர்மு (19)

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட பழங்குடியினத் தலைவர் பிர்ஸா முண்டாவின் பிறந்த தினம் பழங்குடியினர் பெருமை தினமாக இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு

துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரது சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், விடுதலைப் போராட்டத்தில் பழங்குடியினத் தலைவர் பிர்ஸா முண்டாவின் பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார். உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், பிர்ஸா முண்டாவின் வாழ்க்கை இன்றளவும் அனைவருக்கும் உந்து சக்தியாக உள்ளது என்று கூறியுள்ளார். மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், பழங்குடியின தலைவராகவும், சுதந்திர போராட்ட வீரராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் போற்றப்படும் பிர்ஸா முண்டா, பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பழங்குடியினரின் மேம்பாட்டில் தனிக்கவனம் செலுத்தி வருவதாகவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

*பிரதமர்* (17)

குஜராத்தின் சூரத்தில் கட்டுமானத்தில் உள்ள புல்லட் ரயில் நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி இன்று பார்வையிட்டார். மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் பாதையின் (MAHSR) முன்னேற்றத்தை

ஆய்வு செய்தார். பிரதமர் காலையில் சூரத் விமான நிலையத்தில் தரையிறங்கி, புல்லட் ரயில் நிலையம் கட்டுமானத்தில் உள்ள அன்ட்ரோலி பகுதியை அடைந்தார். திரு. மோடி அதிகாரிகளுடன் கலந்துரையாடி பணிகளை ஆய்வு செய்தார். இந்தியாவின் மிகவும் லட்சிய உள்கட்டமைப்பு திட்டங்களில் ஒன்றான MAHSR, குஜராத் மற்றும் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் மகாராஷ்டிரா ஆகியவற்றை உள்ளடக்கிய 508 கிலோ.மீட்டர். நீளத்தை உள்ளடக்கியது. இந்த வழித்தடம் சபர்மதி, அகமதாபாத், ஆனந்த், வதோதரா, பருச், சூரத், பிலிமோரா, வாபி, போய்சர், விரார், தானே மற்றும் மும்பை உள்ளிட்ட முக்கிய நகரங்களை இணைக்கும், இது இந்தியாவின் போக்குவரத்து உள்கட்டமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் படியாகும். புல்லட் ரயில் கட்டுமான பணி முடிந்ததும், மும்பைக்கும் அகமதாபாத்துக்கும் இடையிலான பயண நேரத்தை கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாகக் குறைத்து, நகரங்களுக்கு இடையேயான பயணத்தை வேகமாகவும், எளிதாகவும், வசதியாகவும் மாற்றும்.

பீகார் தேர்தல் 1(3)

243 உறுப்பினர்களை கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 202

தொகுதிகளில் வெற்றி பெற்றது. இது குறித்த கூடுதல் தகவல்கள்........

(வாய்ஸ்)

பீகார் தேர்தல் 2(16)

(வாய்ஸ்)

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றதை அடுத்து, அதில் இடம்பெற்ற தலைவர்கள் இன்று பாட்னாவில் முதலமைச்சர் திரு நிதிஷ்குமாரை சந்தித்துப் பேசினர். இந்த சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய லோக் ஜன்சக்தித் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு சிராக் பாஸ்வான், தேர்தல் வெற்றிக்காக திரு நிதிஷ்குமாருக்கு வாழ்த்துத் தெரிவித்ததாக கூறினார். கூட்டணியில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பங்களிப்பே இந்த வெற்றிக்கு காரணம் என்று திரு நிதிஷ் குமார் கூறியதாக அவர் தெரிவித்தார்.

பீகார் தேர்தல் வெற்றி தமிழகம், மேற்கு வங்கம் உள்ளிட்ட இதர மாநிலங்களிலும் தொடரும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளது சரியான கருத்து என்று மத்திய அமைச்சர் திரு ஜிதன்ராம் மாஞ்சி கூறியுள்ளார். செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், பீகார் வளர்ச்சிக்காக பிரதமர் திரு

நரேந்திர மோடி செயல்படுத்திய திட்டங்களை சுட்டிக்காட்டினார். குறிப்பாக தொழில்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்

பீகார் தேர்தல் 3(11)

காரணமாக, கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக வகை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன்மூலம் பீகாரைச் சேர்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக இதர மாநிலங்களுக்கு செல்வதை தடுக்க இயலும் என்றும் திரு ஜிதன்ராம் மாஞ்சி தெரிவித்தார்.

பீகார் சட்டப்பேரவை தேர்தல் தோல்விக்கான காரணம் குறித்து காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இன்று கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். புதுதில்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி உட்பட மூத்த நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர். இந்த தேர்தல் தோல்வி மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாக காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு கே சி வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

பியூஷ் கோயல் (9)

உலகளவில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார். செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு

காரணம் என்றார். உலகளாவிய சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு இந்தியா தலைமை வகிக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் விருப்பமாகும் என்றும் அவர் கூறினார். சர்வதேச வர்த்தக அமைப்பில் இந்தியா தலைமைப் பண்புடன் செயலாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார். வளரும் நாடுகளின் குரலாக இந்தியா செயல்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஷெகாவத் (7)

வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சியில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். கேங்க்டாக்கில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா கண்காட்சியில் காணொலி வாயிலாக உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார். இந்நிகழ்ச்சியில் பேசிய அருணாச்சலப்பிரதேச முதலமைச்சர் திரு பெமாகண்டு, வடகிழக்கு மாநிலங்கள் சுற்றுலாத்துறையில் பெரும் வளர்ச்சிக் கண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

*ரங்கசாமி* (16)

நரிக்குறவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க புதுச்சேரி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று முதல்வர் திரு ரங்கசாமி கூறினார்.

புதுச்சேரி அரசின் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் பகவான் ஸ்ரீ பிர்சா முண்டா 150-வது பிறந்தநாள் விழா பழங்குடியினர் கவுரவ தின விழாவாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் பேசிய முதலமைச்சர திரு ரங்கசாமி, நாட்டின் விடுதலைக்காக பழங்குடியின மக்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்துள்ளதாகவும், புதுச்சேரி அரசு பழங்குடியின மக்களுக்காக எத்தனையோ திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது என்றும் கூறினார் . பழங்குடியின மக்கள் தொழில் காரணமாக பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்த்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர புதுச்சேரி அரசு மனைப்பட்டா கொடுத்துள்ளது என்றும் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்......

**(வாய்ஸ் -சிளம்)**

**விழாவில்,** சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி, துறை செயலர் திருமதி முத்தம்மா, இயக்குநர் திரு அர்ஜீன் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி □ராஜக (8)*

புதுச்சேரி பாஜகவின் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை மற்றும் கலந்தாய்வு கூட்டம் தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட தமிழக பிஜேபியின் முன்னாள் தலைவர் திரு அண்ணாமலை கலந்தாய்வு கூட்டத்தை தொடங்கி வைத்தார். இதில்

உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், பாஜக சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் சரவணன்குமார், திரு கல்யாணசுந்தரம், திரு செல்வம், திரு ராஜசேகர் மற்றும் பாஜக நிர்வாகிகள், முகவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வானிலை (10)

இலங்கையை ஒட்டிய தென்மேற்கு வங்ககடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. அடுத்த 24 மணிநேரத்தில் மேற்கு வடமேற்கு நோக்கி இது நகரக்கூடும் என்றும் தொரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மயிலாடுதுறை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது. மேலும் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நாளை மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே வரும் 19-ம் தேதி அந்தமான கடல்பகுதியில் மற்றொரு குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.